செய்தி வெளியீடு எண்: 514 நாள் : 25.09.2013

**பத்திரிக்கைச் செய்தி**

மீன்வளத்துறையின் மாதாந்திர ஆய்வு கூட்டம் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் திரு.கே.ஏ.ஜெயபால் அவர்கள் தலைமையில் 24.09.2013 அன்று சென்னையில் நடைபெற்றது.

மீன்துறையின் மாநாட்டு கூடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர், முனைவர் ச. விஜயகுமார், இ.ஆ.ப., முன்னிலையில் நடைபெற்றது. அதில் மீன்துறை இயக்குநர் திரு ச. முனியநாதன் இ.ஆ.ப, மீன்வளத் துறையின் மீன்பிடித் துறைமுக திட்டங்கள் வட்ட முதன்மை பொறியாளர், மீன்துறை கூடுதல் இயக்குநர், மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் கலந்துகொண்டனர்.

மீன்வளத்துறையால் செயல்படுத்தப்பட்டு வரும் முக்கிய திட்டங்களான மீனவர்களுக்கு மீன்பிடித் தடைக்கால நிவாரணம் வழங்குதல், மீன்பிடிப்புக் குறைந்த காலத்திற்கான நிவாரணம் வழங்குதல், மீன்பிடி படகுகளை இணையதளம் மூலம் பதிவு செய்தல், மீனவர்களுக்கு கைரேகை பதியப்பட்ட அடையாள அட்டைகள் வழங்குதல் மற்றும் இதர மீனவர் நலத்திட்டங்களுடன் நீர்தேக்க மீனவள மேலாண்மை, நீர்வள நிலவள திட்டப்பணிகள் , தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டப்பணிகள், தேசிய மீனவள மேம்பபாட்டு வாரிய திட்ட பணிகள் மற்றும் மேற்குதொடர்ச்சிமலை மேம்பாட்டு திட்டப்பணிகள் குறித்து ஆய்வு செய்து மக்கள் நலத்திட்டங்கள் விரைவில் மக்களைச் சென்றடைய ஆலோசனைகள் வழங்கினர்.

மேலும் மாண்புமிகு மீன்வளத்துறை அமைச்சர் அவர்கள் வங்கி அலுவலர்களுடன் கலந்தாலோசித்து தற்பொழுது மீன்துறையின் வாயிலாக மின்னணு பரிவர்த்தனை (ECS) மூலம் உதவித்தொகை விநியோகிக்கப்பட்டு வரும் முக்கியத் திட்டங்களான மீன்பிடித்தடைகால நிவாரணம், தேசிய கடல் மீனவர் மற்றும் மாநில கடல் மீனவ மகளிர் சேமிப்பு நிவாரணத் திட்டம் மற்றும் மீன்பிடிப்பு குறைந்த காலங்களுக்கான சிறப்பு நிவாரண திட்டம் ஆகியவற்றின் கீழ் மீனவர்களுக்கு மேலும் விரைவாக உதவித்தொகை சென்றடைய ஆலோசனைகளை வழங்கினார்.

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் பணிபுரியும் மண்டல மீன்துறை இணை இயக்குநர்கள், மீன்துறை துணை இயக்குநர்கள் மற்றும் மீன்துறை உதவி இயக்குநர்கள் இந்த ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

**வெளியீடு:** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9